மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம்

வெள்ளானைப்பட்டி ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், வெள்ளானைப்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண் . 116/1A1B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : FAHWEHOP

அளவு - 1 : 400

குறிப்பு:

உத்தேச மனைப்பிரிவின் பரப்பு : புலவரைபடத்தின்படி - **4450.00** ச.மீட்டர் (அ) 1.10 ஏக்கர்

நிலையில் உள்ளதன்படி - 4375.04 ச.மீட்டர் (அ) 1.08 ஏக்கர்

ஒதுக்கிய மனைகள் - 19

மனைப்பிரிவின் எல்லை -

நிலையிலுள்ள சாலை -

உத்தேச மனைப்பிரிவு சாலை -

வ

பொது ஒதுக்கீடு:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியவை:

a) மனைப்பிரிவு சாலை - 985.185 ச.மீட்டர்

மனைப்பிரிவு சாலை பரப்பளவு நீங்கலாக மனைகளின் பரப்பு - (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு)

-(4450.00 **ச.மீ** - 985.185 **ச.மீ**) = 3464.815 **ச.மீ**

ii) பூங்கா ஒதுக்கீடு:

தேவையான பரப்பு=(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

= (4450.00 - 985.185) x 10% = 346.48 ச.மீ

அரசாணை எண் : 18 ந.நி.(ம) கு.வ துறை நாள் :04.02.2019 -ன் படி பூங்கா ஒதுக்கீடு 347.00 ச.மீ ஈடான அரசு வழிகாட்டு மதிப்பின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

iii) பொது உபயோகம் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு:

தேவையான பரப்பு - (மனைப்பிரிவின் பரப்பு - உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 0.5%

- (4450.00 - 985.185) x 0.5% = 17.32 ச.மீ

பொது உபயோகம் ஒதுக்கீடு - 19.73 ச.மீட்டர் (0.569%)

TANGEDCO - விற்கு ஒதுக்கீடு - 20.45 ச.மீட்டர் (0.590%)

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019 ன் படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சி தானமாக ஒப்படைக்கப்பட்டது (ம) அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் : 31.01.2020 ன் படி TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO (அ) உள்ளாட்சி தானமாக ஒப்படைக்கப்பட்டது.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளவேண்டும்.

3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு வழங்கப்பட்ட சான்றுகள் சரியானவையல்ல என்று அறியப்பட்டலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படல் வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 60cm x120cm அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண். 181 வீ.வ (ம) ந.வ. துறை நாள். 09.12.2020 ன் படி உத்தேச மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைநீர் தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள்(ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் தகுதிகேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

7. அரசாணை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது மனுதாரரின் நில உரிமத்தை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.


9. பிரஸ்தாப மனைப்பிரிவு் அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

10. அரசாணை எண். (2D):339 நாள். 19.12.2023 ன் படி நில உபயோக மாற்றம் செய்யபட்டுள்ளதில் குறிப்பிடபட்டுள்ள நிபந்தனைகள் தவறாமல் கடைபிடிக்கப்பட வேண்டும்.

ம.வ / கோ.உ.தி.கு எண் : 408/2025

திட்ட அனுமதி எண் : 489/2025

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோயம்புத்தூர் மாவட்டம்



Signature Not Verified
Signed by Joint Director
Location:Coimbatore
Date:2025.08.26 16:43:26

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Coimbatore
Date:2025.08.25 17:39:35